236

236/51

பதிவு எண் — வெள்ளிக்கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

# முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு | குருகுலம், மாம்பாக்கம் ; விகிருதி, கார் ; 15—12—50. | தளிர் க

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 16 JAN 1951

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

## குருகுலக் கல்வி

— "தாணு."

"நம் முன்னோர், ஒற்றுமையை எப்படி ஏற்படுத்தினார்கள்? விரைவாகப் பயணம் செய்யக் கருவிகள் இல்லாத அக்காலத்தில் எப்படி முடிந்தது?

அறிவென்னும் விளக்கைக் கையில் ஏந்திப் பரந்து கிடந்த இந்நாட்டின் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடிவரை ஞானமும் வல்லமையும் வாய்ந்த துறவிகள் சென்று இதனைப் பரப்பினர். இதற்குக் காரணம் அக்காலக் கல்வி முறையே.

சிறு குழந்தைகளை 8-வயதில் குருகுலத்துக்கு அனுப்பினர். 12 ஆண்டுகள் வேறுபாடில்லாமல் குருவின் திருவடிகளில் அமர்ந்து அவர்கள் கல்வி கற்றனர்.

குரு, பணத்துக்கு அடிமையல்லர், சிறந்த மக்களையும் நாட்டையும் அமைப்பதையே தங்கள் வாழ்க்கை நோக்கமாகக் கொண்டிருந்தனர். மனிதனை உயர்த்தி ஒழுக்கத்தையும் அறிவையும் ஒருங்கே வளர்த்தனர்.

அப்படிப்பட்ட மாணவர்கள் வெளிவந்து மக்களுடன் பழகியதால் மனிதநிலை உயர்ந்தது. இதனாலேதான் தக்கோர் பலர் நாட்டில் தோன்ற முடிந்தது. அரசர்கள், துறவிகள், கல்விமான்கள் பலர் மிகுதியாகத் தோன்றினர்.

ஆகவே, நாட்டில் மீண்டும் அத்தகைய ஒழுக்கம் வாய்ந்தவர்கள் ஏற்பட வேண்டுமானால் கல்வி முறை மாறவேண்டும். குருகுலக் கல்வி முறை ஏற்பட வேண்டும்.

சாதி மத வேறுபாடுகள் ஒழிந்து இந்திய நாட்டின் உறுப்பாயுள்ள மக்கள் நாம் என்ற ஒற்றுமையுணர்வு ஏற்படவேண்டுமாயின், குருகுல முறைதான் ஒரேவழி!"

'—தியாக பூமி'

# குருகுலம்,—இது, தொண்டின் சூழல்!

## ஒரு பேராசிரியச் சான்றோரின் மாணவர் அன்பர் ஈட்டம்;

### பணி ஆர்வமுடையோர் பண்ணை.

—ஆடலரசு, சைதை.


நல்வாழ்வு வேண்டுமானால், நல்ல அறிவும் நல்ல உணர்வும் நல்ல பழக்க வழக்கங்களும் வேண்டும். அவை, தக்கார் தொடர்பினால் பெருகும். அது கிடைப்பது எப்படி?

தக்கார் என்பவர், "தொண்டலால் துணையுமில்லை" என்னும் அருள்மொழிப்படி எப்போதும் பணி ஆர்வமாய் மன்பதைத் தொண்டராய் இருப்பர். தொண்டுக்குத் துணை நிற்பவரோடு நெருக்கம் கொள்வர்; தம்மைப்போல் தொண்டு செய்பவரோடு அன்புள்ளம் வைப்பர். அல்லாதவரோடெல்லாம் வீணாகத் தொடர்புகொள்ள விரும்பார். ஆதலால், பணி ஆர்வங்கொண்டு நற்செயல்களுக்கு யார் உறுதுணையாய் இருப்பாரோ, அவர்க்குத்தான் பெரியோர் தொடர்பும் நெருக்கமும் கிடைக்கும்.

பொதுமக்கள் நிலையிலிருந்து சிறப்பு மக்களாய் உயர்வதற்கு ஒரே ஓர் எளியவழி இதுதான்.

தொண்டராவதற்கு எந்நிலையினரும் முன்வரலாம். கல்வி, செல்வம், ஒழுக்கம், நற்பழக்கம் முதலியவற்றில் தகுதி குறைவாயிருப்பவரும் முன்வரலாம். தக்கார் தொடர்பில் ஆர்வமும் நல்ல சூழ்நிலையில் விருப்பமும் இருந்தால் போதும். தம் வாழ்க்கைப் போக்கை உடனே மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுகூட இல்லை. தம் நிலைக்கு ஏற்ப ஏதேனும் ஒரு தொண்டைத் தேர்ந்துகொண்டு, தக்கார் இணக்கத்துடன் தொடர்ந்து செய்து வரவேண்டும்.

நாளடைவில் அது, நல்ல சூழலையும் நல்லோர் தொடர்பையும் பெருக்கி நல்வாழ்வில் உயர்த்திவிடும். அமைதி வாய்ந்த, இன்ப வண்ணமான, புகழ் பெருகிய உயர்நிலையை உண்டு பண்ணிவிடும்; அருள் தழைவும் கைகூடும்.



இவ்வாறு உணர்ந்துகொண்ட இவ்வுண்மையை, இனிச் செயற்படுத்திக் கொள்ளவும் ஒரு நல்ல வாய்ப்பு, நம் வாழ்நாளில் நம் கண்ணெதிரில் உள்ளது.

இந் நூற்றாண்டின் நற்பயனாக, ஆசிரியர் இளவழகனார் நம் காலத்தில் விளங்குகின்றனர். அவர், ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோரும், தமிழ் இலக்கண இலக்கியங்களையும் சிறப்பாகச் சங்க நூல்களையும் திருவருட் புகழ்நூல் பொருள் நூல்களையும் நுணுகி உணர்ந்து தெளிந்த நுண் மாண் நுழை புல மிக்க பேரறிஞருமாவர்.

சார்ந்தாரைத் தம் திருவருட் பொலிவுமிக்க தோற்றத்தாலும் அமர்ந்த அருள் நோக்கு ஆழ்ந்த மெய்ப்போக்கு இனிய நல்வாக்கு முதலியவற்றாலும் தம்பால் மிகவும் ஈடுபடுத்திக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர். இவர், தம்விரிவுரைகளைக்கேட்க வரும் பல்வகைச் சார்புள்ள ஆண் பெண் அன்பர் நூற்றுக் கணக்கானவரை ஒரே குடும்பத்து மக்களெனப் பழகும்படி செய்துள்ளனர்; கல்வித் தெளிவிற் செலுத்தியுள்ளனர்; அருட் கருத்தில் இருத்தியுள்ளனர்; மன்பதைப் பணியில் தெருட்டியுள்ளனர்.

உலகியலில் உள்ள வீணான வேற்றுமைகளை விலக்கி மன்பதையின் பொதுவான வாழ்வு நலங்களை உயர்த்த, தாம் பிறந்த நாடு மொழி இனப் பண்புகளை ஒட்டி, அருளியலிற் கலந்து அதன் ஆற்றலால் உண்மைத் தொண்டு செய்து வருகின்றனர்.

ஆசிரியர் தொண்டுகள் மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கத்தில்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

## நிகழ்ச்சிகள்

பிரிட்டன் முதல்வர் ஆட்லி அமெரிக்கா சென்று திரும்பிவிட்டார். அமெரிக்கத் தலைவருடன் அவர் கலந்து பேசியதில், எல்லாவற்றிலும் ஒற்றுமை நிலவியதாகவும் தமக்கு அமைதி தந்திருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

* *

கொரியப் போரை உடனே நிறுத்தி விட்டுப் பின்னர் உலக அமைதிக்கு இடஞ் செய்ய, ஐ. நா. இந்தியச் சார்பாளரின் மெச்சத்தக்க முயற்சியால், 13 ஆசிய நாடுகள் கூடிச் சிந்திக்கின்றன. செஞ்சீனப் படையை, 38° கோட்டோடு நிற்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றன. அமைதிக்கு முயற்சியெடுக்க ஒரு குழு ஏற்படுத்தப் போவதாகவும் தெரிகின்றது. அதில், இந்தியாவும் கலந்து கொள்ளக்கூடும்.

* *

நேபாளத்திலிருந்து புதுடில்லிக்கு அரசியல் தொடர்பாகப் பேச வந்தவர்கள், பேச்சு முடித்துக்கொண்டு திரும்பினர். ராணா ஆட்சியிலிருக்கும் பல ஊர்களைக் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் மீட்டுக்கொண்டிருக்கின்றனர். நேபாளம் நம் நாட்டுடன் தொடர்புடையதாதலின், அதன் அரசியலில் இந்தியா கருத்துடன் கவனித்து வருகின்றது.

* *

உணவு நிலைபற்றி ஆராய, நாட்டின் மாகாண உணவு அமைச்சர்கள் பம்பாயில் கூடினர். வரும் ஆண்டில் பற்றாக்குறை மிகுந்து காணப்படுவதால், தன் தேவை நிறைவேற்றத் திட்டப்படி உணவுப் பண்டங்கள் இறக்குமதி செய்யா திருக்கப்போவதில்லை என்று உறுதி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்னையின் பற்றாக்குறை 8 முதல் 9-நூறாயிரம் வரை என்று மதிப்பிடப்படுகின்றது. சென்னையில் தொடர்ந்து நான்காம் முறையாகப் பருவ மழை தவறியிருக்கின்றது.

பர்மாவில் நிறைய கொய்யரிசி இருக்கின்றதாம். அதைத் தருவிக்கத் தக்க முயற்சிகள் எடுக்கப்படலாம். அரிசி குறைவுக்காகக் கொடுக்கப்படும் பிற தானியங்களுக்காகக் கூடியவரை கொய்யரிசியேனும் கிடைக்க அப்போது வாய்ப்பிருக்கும்.

* *

இந்தியாவுக்கு வந்த அகதிகள் பலர் இப்போது திரும்பவும் பாகியத்தானுக்குச் செல்கின்றனர். நாளொன்றுக்கு 1500 முதல் 2000 பேர் வரை போகின்றனர் என்று இந்திய முதல்வர் அறிவித்திருக்கின்றார்.

* *

இந்தியாவின் நிதி நிலைமையில் அமைதி தெரிவித்த நிதி அமைச்சர் 'தேஷ்மூக்', பாகியத்தான் ரூபாவின் மாற்று மதிப்பு தகுதியாகத் திட்டப்படுத்தப்பட்டால், இரு நாட்டின் வாணிபமும் முன்னேற்றமடையும் என்றார்.

Phone: 3419.

**R. DASEN STUDIO**

ELECTRIC PHOTO ARTISTS

1-48, RATTAN BAZAAR

MADRAS P. T.

*Branches at :-*

KARAIKUDI, MADURA, COIMBATORE AND PUDUKOTTAI.

வித்தியா

இஞ்சினியரிங் ஒர்க்ஸ்

இரும்பு பித்தளைக் கடைசல் தொழிற்சாலை,

1 & 2, பிள்ளையார் கோவில் தெரு,

P. T., சென்னை.

## கந்தர் கழலெழுபது

[ திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. ]

கழலின் பெருமை

11. காலை யெழுந்ததுமே காதலுமை மைந்த[1] எனச்
சீலமுட னின்று தியானிப்போர்—பேலவினை
வீட்டுவதும் வீட்டிப்பின் மெய்ந்நிலையை யாங்கவர்க்குக்
காட்டுவதுங் கந்தர் கழல்.

12. ஆக்குவதும் ஆக்கி அளிப்பதுவும் ஆக்கினதைப்
போக்குவதும் எல்லாப் பொருள்முடிவும்[2]—நீக்கமற
ஏய்வதுவும் எந்தாய் எனுமடியார் மேல்வினையைக்
காய்வதுவுங் கந்தர் கழல்.

13. ஆதிப் பதமலராய் அந்தமாம் செந்தளிராய்ச்[2]
சோதிப் பொருள்முடிவாய்த் தோற்றமாய்த்—திதொன்றும்
பூணாத தானாய்ப் பொலியுமே மாலயனுங்
காணாத கந்தர் கழல்.

14. எதுவேஎல் லாவுயிர்க்கும் ஈறு பிறிதிங்
கெதுவேஎல் லாவுயிர்க்கும் ஏற்றம்—எதுவேயிங்
கூணதுவே என்றிருந்தே ஊட்டுவித்தங் காட்டுவது
காணதுவே கந்தர் கழல்.

1. "காலையி லெழுந்து ணுமமெ மொழிந்து காதலுமை மைந்த எனஓதி"—திருப்புகழ், 871.

2. திருவாசகம்—திருவெம்பாவை.



தமிழ்த்தாய்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.


| கிளை | விகிருதி, கார் | தளிர் |
|---|---|---|
| 3 | 15-12-50 வெள்ளி | 9 |


## - நன் முயற்சி -

முயற்சியை 'ஆள்வினை' என்றும் பெரியோர் கூறுவர். முயற்சி என்பதை 'முற்போக்கு நிகழ்ச்சி' என்றும் சொல்வதுண்டு. சும்மா இராமல் முன்னேற்ற முகமாக ஏதேனும் செயல் நிகழ்வதை 'முயற்சி' என்று மக்களும் நினைக்கின்றனர்.

செயல் நிகழ்ச்சி பிற்போக்குடையதானல் அது 'முயற்சி' என்னும் பெயருக்குப் பொருந்தாது.

முற்போக்குச் செயல்களினும், நல்ல நினைவின் அடிப்படையிலும் நல்ல சொல்லின் அடிப்படையிலும் நடைபெறும் செயல் வகைகளே, 'நல்ல முயற்சி' என்று பாராட்டப்பெறும்.

உரிமை கிடைத்தபின், மக்கள், இத்தகைய நல்ல முயற்சிகளையே செய்து செய்து, தம் உரிமையை மேலுமேலும் பெருக்கி நிலைநிறுத்திக் கொள்ளவேண்டும்.

இங்ஙனம் முயற்சி செய்யாத நாடு ஒருபோதும் முற்போக்குடையதாகாது. அதுவும் நல்ல முயற்சிகள் இல்லாத நாடு, தனது முற்போக்கை நிலை நிறுத்திக் கொள்ளவே முடியாது. இந்த நுட்பம், நாட்டு மக்கள் உள்ளத்தில் நன்ருய் வேரூன்றியிருப்பது நல்லது.

செயல் நிகழ்வதையும் செயல் வெற்றி பெறுவதையும் விட, அது நல்ல நினைவின் அடிப்படையிலும் நல்ல சொல்லின் அடிப்படையிலும் நிகழ்வதுதான் மேலானது.

வெற்றிப் பயனுகிய காரியத்தை விட, செய்கை முறையாகிய காரணந்தான் பெரியோர்க்கு முதன்மையாகவும் மேன்மையாகவும் தோன்றும். செய் முறைகளில் ஒழுங்காய் நிகழ்வதையே 'நன் முயற்சி' என்று அவர் மதிப்பர்.

அரசியல் காரியங்களும், பொருளியல் நடக்கைகளும், வாழ்வியல் செய்கைகளும் இவ்வாறு நன் முயற்சிகளாக நடைபெறுங் காலங்களில் உலகத்தில் இடர்ப்பாடுகள் கிளைப்பதில்லை.

நன் முயற்சிகளாக நிகழாமல் வெறு முயற்சிகளாக நடைபெறும் நாடுகளில் அழிவு நிலையே மேன்மேலும் வளர்ந்துவரும்; வளர்ந்து வருதலையுங் காண்கின்ருேம். பாடுபட்டுத் தேடிய பொருளும், ஊக்கமும், ஆற்றலும் நன்முறையிற் செலவழிந்து நாடு நலமுறுவதில் அனைவரும் கருத்தாயிருந்தால், இடரில்லாத முன்னேற்றத்தை விரைவிற் காணலாம்.

### நடவடிக்கை :

நன்னினைவோடு செய்யப்படும் முயற்சி 'நன்முயற்சி' என்று பார்த்தோம். நாட்டில் நல்ல திட்டங்கள் நடவடிக்கையில் நிறைவேருமல் இடர்ப்படுவதற்குக் காரணம், நாட்டில் அங்கங்கும் நன்னினைவு இல்லாமை என்பது பொருந்தும்.

குடிமக்கள் ஆட்சி என்ருல், குடிமக்களே முதலில் நன்னினைவுடன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குடிமக்களின் சார்பாளரான அரசவையினர் ஏற்படுத்தும் திட்டங்கள், அப்போது தான் எளிதாகவும் இனிதாகவும் நடவடிக்கைக்கு வரும்.

உணவு நெருக்கடி பற்றிப் பங்கீட்டு முறை ஏற்பாடு செய்யப்பட்டால், நன்னினைவு இல்லாத இடங்களில் பதுக்கலும், வாய்மையற்ற வாணிபமும் உண்டாய்விடுகின்றன.

நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்,
வடுவஞ்சி வாய்மொழிந்து,
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்

நம் நாட்டுப் பெரும் பண்புக்குக் குறைவு நேர்கின்றது.

மக்கள், தம் நினைவிலும் பொறுப்பிலும் தகுதியாய் இல்லாமல் ஏனோ தானோ என்று இருந்தால், மக்களாட்சி எப்படி உருப்பெறும்? நிலைப்புறும்?

உழவு செய்வதிலும், தொழில் செய்வதிலும், அவற்ருல் உண்டாகும் பொருட் பெருக்கங்களை அனைவர்க்கும் வழங்குவதிலும், பிற வாழ்வியல் வகையிலும் நாட்டு மக்கள் நன்னினைவுகளின் அடிப்படையில்

நடந்துகொள்ளவேண்டும்; அப்போதுதான், அவர்கள் நலத்துக்காக எடுக்கப்படும் திட்டங்கள் எவையும், அவை யாரால் எடுக்கப்பட்டாலும், நன்றாய் நடவடிக்கையில் வரும். பயன்பெறும் நன் முயற்சியாய் முடியும். நாட்டு மக்கள் உழைப்புகளும் பயன் விளைக்கும் நன்முயற்சிகளாய் ஓங்கும்.

## வீண் வல்லமை :

மக்கள், முதலில் தம் உழைப்புக்கும், பின்பு சிறு முதல் கொண்டு செய்யும் தொழிலுக்கும், அதனை அடுத்து அளவாகப் பொறிகளின் (யந்திரங்களின்) உதவியால் நிகழும் காரியங்களுக்கும் மதிப்புத் தரவேண்டும்; எவை இல்லாமற் போனாலும் அவரவர் உழைப்புமட்டும் எப்போதும் நிலையாயிருக்கவேண்டும். நாட்டுக்கு அதுதான் நிலையான செல்வம்; இடையிலே விட்டுப் பிரியாதது. முதல் வைப்பும் பொறிகளும் பிரியக்கூடியவை. உடலுழைப்பானாலும் அறிவு உழைப்பானாலும் உழைப்பு என்றும் உடனிருப்பது.

பல நாடுகள், முதற்பொருளிலும் அறிவியல் பொறிகளிலும் தம் உழைப்பைவிட நினைவு மிகுதியாக வைத்துப் பெரிதும் ஊடாடி வருகின்றன. இதனால் செல்வம் எங்கும் நிரவுதலாயில்லாமல், ஓரிடத்திற் குவிந்து பிற இடங்கள் வறுமையில் வாடும்படி நேர்கின்றது. பொறிகளின் வாணிபத்துக்கும் நடமாட்டத்துக்கும் அயல் நாடுகள் இரையாகும்படி நிலைமைகள் நெருக்கடியாகின்றன.

ஆற்றல் வாய்ந்த அறிவியல் முயற்சிகளெல்லாம், கொடிய கொடிய போர்க் கருவிகளின் படைப்புக்குத் துணைபோகும்படி இடம் உண்டாகின்றது.

குடிமக்கள், நன்னினைவில் சிறிது வழுவினாலும், சற்றும் வழுவுதலே இல்லாமல் ஒழுக வேண்டிய அரசியல், முற்றிலும் நன்னினைவில் பிறழும்படி உலகக் குழப்பங்கள் மூண்டுவிடுகின்றன.

கடைசியில் எல்லாருடைய எல்லா முயற்சிகளும், நன்னினைவின் அடைப்படையில் நன்முயற்சிகளாய் நிகழாமல், வெறு முயற்சிகளாய் வீண் ஆரவார முயற்சிகளாய்க் காட்டாற்றுப் பெருவெள்ளம்போல் நாட்டை அழிக்கும் நாகரிகமில்லா முயற்சிகளாய்த் தீங்கிற்சென்று முடிந்துவிடுகின்றன. வல்லமைகள் வீணாகின்றன.

## எது வல்லமை ?

உலக வல்லரசுகள் எவ்வளவு வல்லரசுகளாயிருந்தாலும் ஒன்றை ஒன்று கண்டு அஞ்சி நடுங்குகின்றன. அரசு வல்லரசாகி என்ன பயன்? புறத்தில் வல்லரசாயிருப்பவை நன்னினைவிலும் வல்லரசாயிருந்தால், இப்படி அஞ்சியே வாழவேண்டியதில்லை.

அண்மையில் ரஷ்யக் குழுவினர் சிலர் திபேத்துப் பக்கம் வந்து இந்தியாவையும் அண்டை நாடுகளையும் கண்ணோக்கி, அறிவியல் பொறிகளின் துணையால் ஏதோ திட்டங்கள் செய்து குறிப்புகள் கொண்டுபோயிருக்கின்றனர் என்று செய்திகள் இதழ்களில் வெளிவந்திருக்கின்றன. மாறுகோலம் பூண்டு புத்தர் உருவச்சிலையினுள் பொறிகளை மறைத்து வைத்திருந்து, இம்முயற்சியைச் செய்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

நாடு ரஷ்யாவாயிருந்தாலும் அமெரிக்காவாயிருந்தாலும் அல்லது இந்தியாவாயிருந்தாலும், தம் நாட்டை நன்முயற்சிகளால் வளம்படுத்தும் நல்லுழைப்பை விடுத்துப் பிறநாடுகளைக் கண்ணோக்கும் அவாவிய முயற்சியை என்னென்பது?

முயற்சி என்னவோ பெருமுயற்சிதான்; திறமையுடன் செய்யப்படுவதுதான். ஆனால், தம் நாட்டு வரையறையை மீறி அயல் நாடுகளின் அமைதிக்கும் ஊறு செய்து தம் அவாவுக்கு அவற்றை இரையாக்குவது என்பதாயிருந்தால், திறமையான பெருமுயற்சியாயுள்ள அது, முடிவில் என்னாகும்? பொறியியல் வல்லமைகளைப் பயன்கொள்ளும் முறை இதுதானா?

நன்னினைவின் அடிப்படையில் நிகழாத, நன்முயற்சியாயில்லாத, தீங்குந் தரும் வெற்று முயற்சியாயன்றோ முடிந்துபோம்.

## நன்னினைவு :

தம் நாட்டுக்கு வலிமை என்பது இத்தகைய அவாவிய முயற்சியன்று; அவரவர் நன்னினைவே தான்.

திறமையான நிகழ்ச்சிகள் எவ்வளவு பரவுதலாய் நிகழ்ந்தாலும், பேரளவில் அயலில் வெற்றி பெற்றாலும், முடிவில் உள்ளும் புறம்பும் அவற்றை அறியாமலே ஊழல் புரையோடுகின்றதென்பதையும், தீமை அடிகோலுகின்றதென்பதையும் மறந்துவிடலாகாது.

குடிமக்களும் நன்னினைவில் இல்லாமல் வல்லரசுகளும் நன்னினைவில் இல்லாமல், உண்மைகளில் நம்பிக்கையில்லாமல் உழன்றால், யாரேனும் காந்தியடிகளைப் போன்ற பெரியோரே நன்னினைவோடும் நன்முயற்சிகளோடும் திகழ்ந்து உலகத்துக்கு உய்வு தருதலையன்றி வேறுவழி ஏது? சான்றோர் வழியில் நாடுமுற்படுவதாக!

# அவள் வாழ்க்கை

[ அ. தி. வீரராகவன் ]

## 1

அவள் உடலிலே அழகு நடனம் புரிந்து கொண்டிருக்கிறது. அவளுடைய நடை நாகரிக உலகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. பேச்சிலே இனிமைத்தேன் சொட்டுகிறது. அவள் முகம் துன்பச் சாயை படர்ந்து சிந்தனை தோய்ந்து காணப்படுகிறது.

அதோ! அந்த வீதியில், தனக்கே உரிய, இயல்பான கவர்ச்சி நடையுடன் மெதுவாக நடந்துகொண்டிருக்கிறாள். 'மேனா மினுக்கி' வாழ்வைத் தானாக உண்டாக்கிக்கொண்டு வாழ நினைத்து முடிவில் தோல்வியுறும் வனிதையர் கூட்டத்தைச் சேர்ந்தவளா அவள்? மனத்தில் துன்பத்தின் சுமை அழுத்த அதனைத் தாங்காமல் தாங்கி மெதுவாகச் செல்கிறாள். ஆனால் பகட்டுகளால் பறிகொள்ளப்பட்ட இவ்வுலகம், எவ்வாறு அப் பாவையின் நிலையினை உணர்ந்து கொள்ள இயலும்?

பக்கத்திலே சிறுவன் ஒருவன் கைப்பிடித்து அழைத்துச் செல்ல, பாங்குடன் அப் பாதை வழியே செல்கிறாள் அவள். உடலிலே, உருவிலே, உணர்ச்சியிலே, ஒவ்வொருவருடனும் பழகும் இனிமைத்தன்மையிலே மேம்பட்டு விளங்கும் அவள் ஒரு குருடு.

அவள் இந்த உலகில் வாழ்ந்து கொண்டுதான் வருகிறாள். இடை வயதில் அம்மை நோயின் வெம்மையினால் ஏற்பட்டதன்று அக் குருட்டுத் தன்மை; பிறக்கும் போதே ஏற்பட்டது.

படித்துப் பட்டம் பெற்றவர்களும், கட்டமைந்த உருவம் கொண்டவர்களும், சிறந்த அறிஞர்களும் வாழ்க்கையை வளம்பெற நடத்த முயன்று முடிவில் தத்தளிக்கும் நிலையில் இருந்துகொண்டிருக்கும்போது, இக்குருடி வாழ்கிறாள். எப்படி? பிச்சைக்காரியாகவா? அன்று, அன்று.

அவளுக்குக் கோரைகளைக்கொண்டு பாய் முடையத் தெரியும். அத்தொழிலில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு அவளும், மகனும் வாழ்க்கையை நடத்தி வந்தனர். இப்போது அவ்வேலையும் இன்றி, வழியில் இரக்கப்பட்டு யாராவது ஏதேனும் கொடுத்தால் அதை வாங்கி உண்டு தம் பாட்டிற் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் யார்? எங்குச் செல்கிறார்கள்? என்பதனைக் காண்போம்.

## 2

ஐந்து வயது நிறையாத இளஞ் சிறுமி. உலக அறிவு ஒன்றும் விளங்காத பருவம். இரு கண்களும் தெரியாதவள். அந்த நிலையில் பாலாற்றங் கரையின் ஓரமாகத் தட்டுத் தடுமாறிச் சென்றுகொண்டிருந்தாள் அவள்.

பகலுக்கும் இரவுக்கும் அவளுக்கு வேறுபாடு தெரியாது. சூரியவெப்பம் தன்மீது படுவதன் மூலமும் விழித்திருக்கும்போதும் பகலை உணர்வாள். உறங்கும்போதெல்லாம் அவளுக்கு இரவுதான். உலகில் தன்னோடு பழகும் மற்றவரும் இம்மாதிரிதான் என்பது அவள் குழந்தையுள்ளத்தின் நினைவு. ஒரு நாள் தனக்கு அன்புடன் உணவளித்த ஒருத்தியிடம் இதனைக் கேட்டே விட்டாள். 'அம்மா, உங்களுக்குக்கூட என்னைப்போல் இந்தஉலகம் இருண்டுதான் இருக்கிறதா?' என்று கேட்டாள். தன்னைக் குருடியென்று, ஒரு குருட்டுப் பெண் கூறியதைக் கேட்ட அம் மாது அவளை நன்கு அடித்துவிட்டாள். அந்த முதிராத உள்ளத்துக்கு இவ்வுலகப் போக்கைத் தெரிந்துகொள்ள முடியவில்லை; இல்லை-புரிந்துகொள்ள முடியவில்லை.

சிறிது நேரத்தில் கரையினின்று இறங்கி ஆற்று மணலில் நடக்கத் தொடங்கினாள். மணலின் மென்மை அவள் மனதுக்கு மகிழ்ச்சி ஊட்டிற்று. பாதங்களை மணலில் பதித்துப் பதித்துத் துள்ளிச் சென்று கொண்டிருந்தாள்.

வெள்ளத்துக்குக் கடவுளைப்போல ஆக்கல் அழித்தல் வல்லமைகள் உண்டென்று கூறுவர். மேடான இடத்தைப் பள்ளமாகவும் பள்ளமான இடத்தைமேடாகவும் ஆக்க அது தவறுவதில்லை. மேடும் பள்ளமுமான அவ் வாற்று மணலில் சென்றுகொண்டிருந்த நங்கை திடீரென்று பள்ளம் ஒன்றில் இடறி விழுந்தாள். அவள் வாயெல்லாம் மண்; கண் எல்லாம் மண். 'ஓ' என்று அலறி யழுதாள்.

அவள் அலறுவதைப் பார்க்க அங்கு யார் இருக்கிறார்கள்! அப்படிப் பார்த்தாலும் கண்கள் இழந்த அச் சிறுமியிடம் ஆதரவு காட்ட யார் முன்வருவார்கள்!

மேனாடுகளில், குருட்டுக் குழந்தைகளுக்கு எவ்வளவோ நலன்கள் செய்யப்படுகின்றன. தனிப்பள்ளிகள் அவர்களுக்கென்று நடத்தப்படுகின்றன. அவர்கள் எழுதுகிறார்கள்; படிக்கிறார்கள்; கைத்தொழில்கள் பல உணர்ந்து பயன் பெறுகிறார்கள். ஆனால் இங்கு... ...? இன்னும் மிகுதியாக அமையவில்லை. அமைத்தற்கான முயற்சியும் மிகுதியாக இல்லை!

அழுகை ஒலி, ஆற்றோரம் கோரை பறிக்கவந்த மாறன் செவியில் விழுந்தது. அவன் ஒரு கிழவன். கோரையால் பாய்கள் முடைந்து காலங் கழிக்கும் ஒரு குறவன். அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவனைக் 'கோரை மாறன்' என்றே அழைத்து வந்தனர். தன் தொழிலில் கைதேர்ந்தவன். ஆற்றங்கரையில் கோரை அதிகம் என்று கேள்வியுற்று அப்பக்கம் வந்து கொண்டிருந்த அவன், ஒலி கேட்ட பக்கம் சென்று பார்த்தான். குழந்தையின் நிலையைக் கண்டு உள்ளம் உருகிவிட்டான். அப்படியே சென்று தூக்கி முகத்திற் படிந்திருந்த மணலைத் துடைத்து அன்பு மொழிகள் சொல்லி இன்புறுத்தினான். தான் வந்த வேலையையும் மறந்து குழந்தையுடன் வீடு திரும்பினான். (தொடரும்)

'முல்லைக் கொடிக்கு'
எல்லா இடங்களிலும்
விற்பனையாளர் தேவை.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வட திருச்சிற்றம்பலப் பெருவெளியில் ஒரு குருகுலமாக அமைப்பு முறையிலும் உருவாகி வருகின்றது. உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கு அது செய்கை நிலயம். அதன் கண், பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலயம் முதலிய பல பணிவகைகள் உள்ளன. மக்கள் அனைவரும் எவ்வகை வேறுபாடுமின்றித் தத்தம் நிலைக்கேற்பப் பணி தலைப்பட்டுப் பயன் பெறக்கூடிய வழி வகைகள் செய்து வரப் பெறுகின்றன.

"கடன் என்ப நல்லவையெல்லாம்" என்றபடி, இக் குருகுலத்தில் நடைபெறவேண்டிய தொண்டுகள் எவ்வளவோ உள்ளன. நல்ல தொண்டுகள் எவ்வகைக்கும் அங்கே இடம் உண்டு. எத்திறத்தவர்க்கும் இடமுண்டு.

பயன் செய்யவும் பயன் பெறவும் எவரும் இக் குருகுலத்தில் மாணவராகவும் அன்பராகவும் தொடர்பு கொள்ளலாம். தொண்டு பூணலாம்; மன்பதை வாழ்வை உயர்த்தலாம்; தம் வாழ்வையும் உயர்த்திக்கொள்ளலாம்.

ஆசிரியர் குருகுலத்தை அவர் கொள்கைகள் செயல் முறைகளுக்கு ஏற்ப, 'தூய்மையின் கோயில், உண்மையின் உறையுள்' என்பேன்.

'ஒளியின் நிலயம், இறையின் உள்ளம், சான்றோர் பள்ளி' எனவும் கூறுவேன்.

'தமிழின் இல்லம், கலையின் காட்சி, தொழிலின் கூடம், ஆய்வின் சாலை' என்பேன்.

'அமைதியின் மன்று, கிளர்ச்சியின் குன்று, இயக்கத்தின் இருசு, தொண்டின் சூழல்' என்பேன்.

'அறத்தின் அகம், பொருளின் வாயில், இன்பத்தின் பூங்கா, வீட்டின் வெளி, திருவள்ளுவர் தமிழ் மறையின் வடிவு' என்பேன்.

'இளவழகனார் தவநிலையின் இருக்கை, ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்னும் கொள்கையின் கோடு, உலகின் கலங்கரை விளக்கம்' என்றெல்லாம் போற்றுவேன், பல்லாற்றானும் போற்றுவேன். எல்லாவற்றிற்கும் மேலாக, அது, ஒரு தொண்டின் சூழல் எனச் சிறந்தெடுத்துக் காட்டுவேன்.

ஆகவே, "தொண்டர்காள் தூசி செல்லீர்" என்றும், "சேர வாரும் செகத்தீரே" என்றும், ஆசிரியர்கள் பேரன்புடன் கலந்து பணி ஆர்வமுடைய அன்பர்களைச் சிறியேனும் அறைகூவி அழைக்கின்றேன். வெல்க, தொண்டு! வாழி, மன்பதை!


**S. GANESHAM & SON,**
**Denatured Spirit, Paint Merchants & Commission Agents,**
Dealers in:—
English Disinfectant Fluid or (Phenyle), Genuine Turpentine, Dry Colours, Enamels, Oils Etc.
**1-44, Venkatachala Mudaly St., P. T., MADRAS-3.**

**ARUL AGENCY**
**COMMERCIAL ART DEALER**
Engravers, Rubber Stamps, Colour Blocks, Steel Dies, Art Printing & Art Painting Etc.,
**18, PEDARIAR KOIL LANE, MADRAS-1.**

**KALI NATESA CHETTY**
Iron & Hardware Merchant
**260, Rasappa Chetty Street, Park Town Post, MADRAS.**

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்
**நம்பிக்கை பெற்ற ஆயுர்வேத உதவிகள்**

**காஸ்மஸ்** கஸ்தூரி மாத்திரை
**கர்ஜன்** கோரோஜனை மாத்திரை
**பாலக்ஸ்** பேதியாக மாத்திரை
**சிசுராக்** குழந்தை டானிக்
**பிமலெக்ஸ்** டானிக்

**யூடினல்** கர்பிணிகளுக்கு
**டோனடெல்** பிரஸவமானபின் டானிக்
**ஹிஸ்மெனே** டானிக்
**பிரதமென்ஸ்** சூதக கோளாறுகளுக்கு
யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை 1.

**கைத்தறி ஆடைகள்**
வணிகக் குறி:
**—N. K. M.—**
**தங்க நாடா**
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடை கட்டும் பட்டாடை கட்டும்
நம்பிக்கையான இடம்:
கருப்பண முதலியார்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

REGISTRAR OF BOOKS 21 DEC 1950 MADRAS

## "முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில்,

எல்லார்க்கும் புரியும் வகையில்,

எளிய விலையில்,

வாழ்வின் பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சிறந்த ஆக்கப் பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 2

வெளிநாட்டுக்கு ரூ. 3

குறிப்பு :—

1. கார்த்திகை விழா முதல் (24-11-50) 'முல்லைக் கொடி' புது ஒளி பெற்று வெளிவருகின்றது. ஆண்டுக் கையொப்பமாகச் சேர்வோர், ஒரு மாதத்துக்குள் (பொங்கல் நாளுக்குள்) விரைவிற் சேர்தல் வேண்டும். அவர்க்கு இதழ்கள் குறைவின்றிக் கிடைக்கும்.

கிழமை இதழாயிருந்தும் இதற்குக் கட்டணம் குறைவு. ஆதலால், காலந் தாழ்ந்து சேர்வோர், சேரும் நாளிலிருந்து வெளிவரும் ஏனை இதழ்கள் மட்டுமே முழுக்கையொப்பத்துக்கும் கிடைக்கப் பெறுவர்.

2. குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ. $1\frac{1}{2}$ மட்டும்.

3. 'முல்லைக் கொடிக்' கையொப்பங்கள் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசிக் கலைமகள் விழாவுடன் நிறைவேறும்.

# குருகுலம், மாம்பாக்கம்;

( வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி )

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

## செய்கை நிலையம்.

நாட்டு மக்கள். 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்' 'பணி' என்னும் ஐவகை வாழ்வியல் திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம், நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம், தொழிலகம், அருள் நிலையம் முதலிய பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : தி. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம்(அஞ்.).